**Spl.SC.No. 43/2019    Dated:. 06.03.2026**

( 5,6 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**அ.சா.4 செந்தூர்பாண்டி**

**மனுவின் அடிப்படையில் மீண்டும் அழைக்கப்பட்டு 5,6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

உச்சிகாளியம்மன் கோவில் தெருவிற்கும் நான் குடியிருக்கும் தெருவிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் நடந்து சென்றால் 5 நிமிடத்தில் செல்லலாம். சாட்சிகள் மதுரை வீரன், முனியசாமி எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். நான் ஜேசிபி டிரைவராக வேலை செய்ததால் காலையில் வேலைக்கு சென்றால் மாலைதான் திரும்பி வரும் வகையில் வேலை இருக்கும் என்றால் சரிதான். நான் பார்த்த சண்டை எவ்வளவு நேரம் நடந்திருக்கும் என்றால் சுமார் அரை மணி நேரம். மதுரைவீரன், முனியசாமிக்கு இரத்தக்காயங்கள் ஏற்பட்ட அவர்கள் அணிந்திருந்த ஆடைகளில் இரத்தம் இருந்ததா என்றால் இல்லை. அவர்கள் இருவரும் கைலி, சட்டை அணிந்திருந்தார்கள். போலிசார் சம்பவ இடத்திற்கு எவ்வளவு நேரத்தில வந்தார்கள் என்றால் அன்று வரவில்லை, மறுநாள்தான் வந்து விசாரித்தார்கள். டிஎஸ்பி என்னை எங்கு வைத்து விசாரித்தார் என்றால் நான் வசிக்கும் தெருவில் வைத்து விசாரித்தார்கள். என்று விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த மறுநாள் இரவு 7.00 மணியளவில் . முதல் விசாரணையில் சாட்சி முனியசாமி எதிரிகளை கேட்டபோது பறத்தேவுடியா பயல்களா இந்த அளவு கேட்கிற அளவுக்கு வளர்ந்துவிட்டீர்களா என்று சரவணன் சொன்னார் என சொன்னதுபோல் என்னை போலிசார் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:29:59 +0530

எதிரிகள் லதா, பரமேஸ்வரி, மாரீஸ்வரி ஆகியோர்கள் வந்து பறப்பயல்களுக்கு இவ்வளவு திமிறா, கேட்கிற அளவுக்கு வளர்ந்துவிட்டீர்களா என்று முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை டிஎஸ்பி விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரியல்ல. லதா, மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகிய மூன்று பேரும் முள்ளுக்கம்பால் மதுரைவீரனையும், முனியசாமியையும் ஓங்கி ஓங்கி அடித்தார்கள் என முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை டிஎஸ்பி விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்த அன்று மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை. காயம்பட்டவர்களை எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் மாலை 6.30 மணி இருக்கும். நான் சம்பவத்தை பார்த்தபோது மணி எத்தனை இருக்கும் என்றால் மாலை 4.30 மணி இருக்கும். மாலை 4.30 மணியிலிருந்து மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கும் வரை நான் சம்பவ இடத்தில்தான் இருந்தேனா என்றால் ஆமாம். அந்த நேரத்திற்குள் போலிசுக்கு சம்பவம் குறித்து தகவல் சொல்லப்பட்டதா என்றால் இல்லை. உச்சிகாளியம்மன் கோவில் அருகில்தான் பார்த்திபனூர் காவல்நிலையம் இருந்தது என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், இடத்தில், விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் புகார்தாரர் என் உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:30:03 +0530

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

5,6 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்து தனியாக குறுக்கு விசாரணை இல்லை.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:30:08 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)